சிவ பஞ்சாட்சரப்புகல்

S.R. ஜெயவேலு, B.A.

'நானும் இருபது வருஷங்களாக என் வழிபடு கடவுளைப் பக்தி சிரத்தையோடுதான் தொழுது வருகிறேன். ஆயினும் பலன் ஏதும் (முழுமையாக) இருப்பதாக தெரியவில்லை, (No tangible benefits) என்று நம்மில் பலர் கூறிக்கொள்வதைக் கேட்டிருக்கிறோம். இதன் காரணம் என்ன?

எது ஒன்றை நாம் வேண்டினாலும் அதனை அளிக்கக் கூடிய தெய்வத்தை (ஏன், மனிதர்களைக்கூட) உரிய வழிமுறைகளில் அணுதினாலன்றி அதனை அத்தெய்வம் நமக்கு முழுமையாக அளிக்க முடியாது. அதனால்தான் நம்மில் பெரும்பாலோர் எவ்வளவோ பக்தி சிரத்தையோடு, வழிபாடு முதலியன செய்தும், தோத்திரம்பாடி துதி செய்தும், வணங்கியும்கூட பலனை முழுமையாகப் பெறுவ தில்லை, காரணம், அந்த பலனைப் பெறும் பண்பை முதலில் நம்மில் வளர்த்துக் கொள்ளவேண்டியதின் அவசியத்தை பெரும்பாலானோர் கருத்தில் கொள்வதே யில்லை. மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினையும் வேண்டிய பலனை பெற்றுக் கொள்ளும் வகையில் பண்படுத்திக் கொள்வது மிக முக்கியம். எந்த ஒரு தெய்வ வழிபாட்டிலும் அத்தெய்வத்திற்குரிய மந்திரத்தைக் கொண்டு வழிபாடு மேற்கொள்ளும் போது அடிப்படையாக (basic minimum) ஆசமனம், பிராணாயசமம், நியாசம், தியான மந்திரம், மூல மந்திரம் முதலியவற்றையாவது தவறாது மேற்கொள்ள வேண்டும் என நம் முன்னோர் வகுத்துள்ளனர்.

இவற்றுள் நியாசம் என்பது '**நியஸ்யதே இதி நியாச**' எனும் அடிப்படையில் 'வைத்தல்' எனும் பொருள்பட அமைந்துள்ளது. நியாசம் என்பது, கடவுளே புகலென்று அவரிடம் ஆத்ம பாரத்தை 'வைக்கை' எனலாம்.[1] மந்திராக்ஷரங்களால் தேவதைகளை (உடல்) உறுப்புக்களில் 'வைக்குங்' கிரியை எனவும் கூறலாம்.[2] மற்றும் நியாசம் என்பது deposit, mortgage எனும் பொருள்பட (ஆன்மா, உடல், உறுப்புகள் இவற்றை இறைவனிடம்) 'ஈடு வைத்த பொருளாகக்' கொளல் எனினும் பொருந்தும்.[3] [1,2,3, Tamil Lexicon]

இப்படி தன்னையும் தனதுடைமைகளையும் இறைவன்பால் வைப்பதற்கு இன்றியமையாத சுத்தி சம்ஸ்காரமாகும். பொதுவாக ஒருவன் தன்னையே பல வகைகளில் பக்குவப்படுத்திக் கொண்டு இறைவனிடம் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் வழிவகைகளே நியாசம் எனப்படும். மந்திரந்நியாசம், (மந்திர வர்ண நியாசம, மந்திரப் பதந்நியாசம்) ரிஷ்யாதி நியாசம், கரந்நியாசம், அங்கந்நியாசம், ஷ்டங்கந்நியாசம், அந்தர மாத்ருகா நியாசம், பஹிர் மாத்ருகாநியாசம், ஜீவந்நியாசம், சிருஷ்டி க்ரமநியாசம், ஸ்திதிக்ரம நியாசம், சம்ஹாரக்ரம நியாசம் என நியாச வகைகள் பல வழக்கிலுள்ளன.

'புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் பெறும்.'

எனும் குறளுக்கேற்ப சரியை கிரியையாதிகளின் அடிப்படையில் நீராடி, உடல், உள்ளம், ஏனைய பகுதிகளைத் தூய்மைப் படுத்திக்கொண்டு உரிய ரிஷியை வணங்கி அடிப்படையாக இரு கரங்கள், விரல்கள், அங்கங்கள் இவற்றைச் சுத்த நீரால் தொட்டும், மந்திரங்கள் சொல்லியும் பாவனையோடு தூய்மை செய்து கொண்டு, பின்னர் குறித்த தெய்வத்திற்குரிய மந்திரத்தின் அக்ஷரங்களைக் கொண்டு தன் உடல், உள்ளங்களில் அத்தெய்வத்தை ஆவாஹனம் செய்வதற்கு முன்னோடியாக அமைவது மந்திரந்நியாசம் ஆகும். ஆக, மனமாதிகளை மந்திர மயமாகவே மாற்றி தன்னில் அந்த மந்திரத்திற்குரிய தெய்வத்தையே ஆவாஹனம் செய்து கொண்டு தியானத்தில் ஆழ்ந்து அமைதலே அடிப்படை தத்துவம் என்பது விளங்கும்.[4] இந்நிலையில் நம்முள் அடங்கும் 96 தத்துவங்களும் குறித்த தெய்வத்தையே (அதற்கான மந்திரத்தின் உதவியால்) நாடி நிற்கும் என்பதும் தெளிவுறும்.[5]

"*ஒருபது மிருபது மறுபது முடன்று*
முணர்வுற இருபத முளநாடி...'[6] (திருப்புகழ்)

---

4. இவை தவிர சிந்தனம் பிராணப்ரதிஷ்டை, பிரணவஜபம், அங்க பூஜை முதலிய பல அநுஷ்டானங்களும் உள.

5. In order that Cosmic Power in a large measure may flow into it (individual Centre), its potential capacity must to that extent be kinetised. Otherwise, a well remaining a well will never contain the sea. To contain it it must be sea itself. -P 160 of Mahāmayā - Power of Consciousness " by Sir John Woodroffe.

6. ஞான அநுபூதியில்.

இந்த நிலையில் எதை வேண்டினாலும் அது அத்தெய்வ சக்தியால் சித்தியாகும் என்பதில் ஐயமுண்டோ? நீ எதை பாவிக்கின்றாயோ அதுவாக ஆகின்றாய், என்பது உபநிஷத் வாக்கியம். இந்த கருத்தை அருணகிரிநாதர் பல இடங்களில் வலியுறுத்து கிறார்.

"... *வேண்டிய போதடியர் வேண்டிய போகமது*
வேண்டவெ றுதுதவு பெருமாளே" (திருப்புகழ்)
"... *ஓங்கு மைம்புல னோட நினைத்தின் பயர்வேனை*
ஓம்பெ றும்ப்ரண வாதி யுரைத்தெந் தனையாள்வாய் ..." (திருப்புகழ்)

இனி, இப்படி ஒன்றிய நிலை எய்துதற்குரிய ஒரு உபாயமாவது குறித்த மந்திர அக்ஷரங்களை மாற்றி மாற்றி உச்சாடனம் செய்து அந்த ஒரு தெய்வத்தையே வெவ்வேறு அர்த்த பாவத்துடன் உபாசிப்ப தாகும். உதாரணம்:

"... *சிவய நம நமசிவய காரணன் சுரந்*
தமுத மதை யருளியெமை யாளு மெந்தை.." (திருப்புகழ்)

இப்படி தன் வயப்பட்டு மேம்படுதலை திருமூலர் குறிப்பதாவது:

"எளிய வாதுசெய் வாரெங்கள் ஈசனை
ஒளியை யுன்னி யுருகு மனத்தராய்த்
தெளிய வோதிச் சிவாய நமவென்னுங்
குளிகை யிட்டுப்பொன் ஞக்குவன் கூட்டை" (திருமந்திரம்)

இந்த சிவ பஞ்சாக்ஷர உபாசனையை அருணகிரிநாதர் ஒரு அரிய திருப்புகழி லேயே மிக அழகாக அருளிச் செய்துள்ளார். அத்திருவருணைத் திருப்புகழ் வருமாறு:

"செய செய அருணத் திரிசிவ யநமச்
செய செய அருணத் திரிமசி வயநச்
செய செய அருணத் திரிநம சிவயத் திருமூலா
செய செய அருணத் திரியந மசிவச்
செய செய அருணத்திரி வய நமசிச்
செய செய அருணத் திரிசிவ யநமஸ்த் தெமை
செய செய அருணத் திரிதனின் விழிவைத்
தரகர சரணத் திரியென உருகிச்
செய செய குருபாக் கியமென மருவிச் சுடர்தாளைச்
சிவ சிவ சரணத் திரிசெய செயெனச்
சரண்மிசை தொழுதேத் திய சுவை பெருகத்
திருவடி சிவவாக் கியகட லமுதைக் குடியேனோ
செய செய சரணத் திரியென முநிவர்க்
கணமிது வினைகாத் திடுமென மருவச்
செடமுடி மலைபோற் றவுணர்க ளவியச் சுடும்வேலா
திருமுடி யடிப்பார்த் திடுமென இருவர்க்
கடிதலை தெரியாப் படிநிண அருணச்
சிவசுடர் சிகிநாட் டவனிரு செவியிற் புகல்வோனே
செய செய சரிணத் திரியெனு மடியெற்
கிருவினை பொடியாக் கியசுடர் வெளியிற்
றிருநட மிதுபார்த் திடுமென மகிழ்பொற் குருநாதா
திகழ்கிளி மொழிபாற் சுவையித ழமுதக்
குறமகள் முலைமேற் புதுமண மருவிச்
சிவகிரி அருணத் திரிதல மகிழ்பொற் பெருமாளே"

(திருப்புகழ்)

இந்தத் திருப்புகழில் சிவமூல மந்திர அக்ஷரங்களை மாற்றி மாற்றி சொல்லிப் புகல் அடைவதோடல்லாமல், பாட்டின் இதர சொல், பிணைத்து அக்ஷரங்களையும் மிக அழகாக மாற்றி மாற்றி, பின்னிப் பிணைத்து அமைத்து சிவனையும், அவனது சிறப்புகளையும் கூட தன்னில் நிலை நிறுத்தி, பாவனையோடு, நியாசம் செய்து

உபாசிப்பது விளங்கும். இந்த பாவஊன தத்துவத்தை மற்றுமொரு திருப்புகழ் குறிப்பதாவது.

"....*பதிபா வஊயுற் றநுபூ தியிலப்*
படியே யடைவித் தருள்வாயே..." (திருப்புகழ்)

இதஊன திருமூலர் கூறுவார்:

"*அஞ்செழுத் தாலே அமர்ந்தனன் நந்தியும்*
அஞ்செழுத் தாலே அமர்ந்தபஞ் சாக்கரம்
அஞ்செழுத் தாகிய வக்கர சக்கரம்
அஞ்செழுத் துள்ளே அமர்ந்திருந் தானே" (திருமந்திரம்)

மேற்கூறிய அருஊணத் திருப்புகழை பாவன ஒருமைத் தியான மந்திரமாகக் கொண்டு நம் உபாசஊனயில் சேர்த்துக் கொள்வது மிகவும் சிறந்தது எனக்கூறவும் வேண்டுமோ? எனவே இத்திருப்புகழைத் தினந்தோறும் ஓதி பக்தி கைவரப்பெற்று சிவனருளுக்குப் பாத்திரமாவோமாக.

சித்தாந்தம்
ஜூஊல, 1983